**அப்போஸ்தலனாகிய பவுல்**

**வாசிக்க**: 2**கொரிந்தியார்** 5:1-22

அப்போஸ்தலர் புத்தகத்தின் கடைசி வசனங்களில் பவுல் ரோமாபுரியில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து வீட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார். அப்படி இரண்டு வருடங்கள் அங்கு தங்கியிருந்து தன்னை தேடிவருகிறவர்களுக்கு உபதேசித்துக்கொண்டிருந்தார். என்று வாசிக்கிறோம். அந்த இரண்டு வருடங்கள் முடிந்தபின் அவர் விடுதலையாக்கப்பட்டு ரோமாபுரியை விட்டு வெளியேறினார். சவுல் என்பது எபிரெய பெயர். பவுல் கிரேக்கப் பெயர். சவுல் என்றால் விரும்பப்பட்டவன் என்று அர்த்தமாகும்.

அந்தியோக்கியாவிற்கு சென்று சிலகாலம் தங்கியிருந்தார். அங்கிருந்து சின்ன ஆசியாவில் உள்ள பெர்கே, லீஸ்திரா, இக்கோனிய, எபேசு, கிரேத்தாத் தீவு, அகாயா, கொரிந்து, துரோவா, தெசலோனிக்கேயா ஆகிய இடங்களுக்கு சென்று சபைகளை பார்வையிட்டார். புதிய நாடுகளில் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் தல்மத்தியா, இல்லிரிக்கம் (யுகோஸ்லாவியா) நாடுகளுக்கு போனார். புதிய சபைகளை ஆரம்பித்தார். பின்பு ஸ்பானியா ஊழியத்தை முடித்துக்கொண்டு ரோமாபுரிக்கு செல்ல தீர்மானித்தார். இதை கேள்விப்பட்ட யூதர்கள் அவர் வராதபடி நீரோ மன்னனிடம் முறையிட்டார்கள். அதற்கு நீரோ மன்னன் சம்மதித்தான். அதையும் மீறி பவுல் வந்தால் கொலை செய்வதற்கு திட்டமிட்டார்கள். இதை அறிந்த சபைமக்கள் இரண்டு பேரை அனுப்பி ரோமாபுரிக்கு வராதபடி தடைசெய்தார்கள்.

பவுல் மறுபடியும் ரோமாபுரிக்கு வந்தார். அவர் அங்கு வந்து சேர்ந்த சில நாட்களில் நீரோவின் கட்டளையின்படி நகரின் ஒரு பகுதியை தீயிட்டு கொளுத்தினார்கள். அதனால் சேதம் மிக அதிகம். அதற்கு கிறிஸ்தவர்கள் தான் காரணம் என்று கிறிஸ்தவர்கள் மேல் போட்டான் மன்னன். எனவே கிறிஸ்தவர்களை கொலைசெய்ய கட்டளையிட்டான். அந்த நேரத்தில் அநேக கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டனர். அநேகர் கைதுசெய்யப்பட்டார்கள். அதில் பேதுருவும், பவுலும் இருந்தார்கள்.

கி.பி 68 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் நாள் பேதுருவை தலை கீழாக சிலுவையில் அறையப்பட்ட அதே நாளில் பவுல் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார். பவுலுடன் ஆக்கில்லா பிரிஸ்கில்லாவும் கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார். நான்கு பரிசுத்தவான்கள் ஒரே நாளில் இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார்கள்.

**கேள்விகள்**:

1. சவுல் என்றால் என்ன?

2. பவுல் எத்தனை வருடங்கள் வீட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார்?

3. பவுல் எப்படி கொலை செய்யப்பட்டார்?